## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.54/2023**

Prosecution Witness : **LW - 16/ PW - 3**

Name : ரவிச்சந்திரன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **13.07.2026**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்ட குற்ற ஆவண காப்பக துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக 2023ம் ஆண்டில் பணிபுரிந்தபோது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை **C.No.77/SJ&HR/Proceedings/ALR/2023 Dated:**07.07.2023 ன் படி, ஜெயங்கொண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.15/2023, சட்ட பிரிவுகள் 354(A), 376(2)(n), 417, 294(b), 506(2) IPC, r/w 3(1)(w)(ii), 3(2)(va) **SC/ST POA Act** ன் படி பதிவு செய்த, வழக்கு கோப்பினை பார்வையிட்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழ்செல்வி, உமாராணி, பிரேமா, சாந்தி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை கண்ணழகன், முத்துகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கண்ணழகன், முத்துகுமார் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். இவ்வழக்கில் எதிரியான பாலமுருகனை 07.07.2023 அன்று

**17.30** மணிக்கு ஆண்டிமடம் பேருந்து நிலையம் அருகே கைதுக்கான காரணம் கூறி கைது செய்து, நிலையம் அழைத்து வந்து பாரா வசம் ஒப்படைத்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேல் விசாரணை செய்து, பிரபாவதி சென்னை, பூபதி குமரேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணை **164(5)** ன் கீழ் வாக்குமூலம் பெற செந்துறை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் சமர்ப்பித்தேன். மருத்துவர் அனுசியா, சனோஜ் உதவி மருத்துவர்கள், அரசு மருத்துவமனை ஜெயங்கொண்டம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் மேகலா மற்றும் சத்தியஅரசு, முதல் நிலை காவலர் தமிழ்செல்வி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாதி சான்று வழங்கிய தாசில்தார் இளவரசன் மற்றும் காவல் ஆய்வாளர் சுமதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகவும், மருத்துவ சான்றிதழ்கள் **அ.த.சா.ஆ.3, 4** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5** ஆகவும், பார்வை மகசர் **அ.த.சா.ஆ.6** ஆகவும், சாதி சான்றிதழ் அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் கண்காணிப்பாளர் என்னை எத்தனை மணிக்கு புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தார் என்ற விவரம் அ.த.சா.ஆ.8 ல் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் தேதி குறிப்பிட்ப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து ஆய்வாளர் விரைவு தபால் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருப்பதாக சொல்லியிருக்கிறாரா என்றால் சரிதான். முதல்

தகவல் அறிக்கை அன்று இரவு 10.06 மணிக்கு தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சியை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் பதிவு செய்த வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யால் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.